**மொரவெவ பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 யூலை 11 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 09 ஆந் திகதியன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 26 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொரவெவ பிரதேச சபையின் நிதி நிலமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி மீதான வருவாயாகிய ரூபா 554,436 கணக்கிலிடப்படாததால் நடப்பாண்டினது வருவாய் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் உத்தியோகத்தர்களுக்கும் ஒப்பந்தகாரர்களுக்கும் வழங்கப்பட்ட முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருந்தபோதும், ஐந்தொகையில் முற்பணமாக ரூபா 108,016 எதிர்மறையான மீதியாக காட்டப்பட்டிருந்தது.

(இ) 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கணடனுக்கான வட்டி ரூபா 933,151 ஆகும். இது கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட கடனுக்கான வட்டி ரூபா 773,575 ஆகும். இது திரண்ட நிதியத்தில் சீராக்கல் செய்யப்படாது கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் திரண்ட நிதியம் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதிகளைக் கணக்கிலிடும்போது மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிக் கணக்கினதும் மூலதனப் பயன்பாட்டிற்கு வருவாய் பங்களிப்பினது கணக்கினதும் மீதிகள் ரூபா 6,390,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின்போது சபை ரூபா 15,197,362 பெறுமதியான கட்டிடங்களை நிர்மாணித்திருந்தது. எனினும், ஐந்தொகையில் அது ரூபா 11,149,172 ஆகக் காட்டப்பட்டமையால் காணி மற்றும் கட்டிடங்களது பெறுமதி இறுதிக் கணக்குகளில் ரூபா 4,048,190 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

(அ) ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை ரூபா 1,342,228 ஆகும். ஐந்தொகையில் அதனை ரூபா 1,051,721 ஆகக் காட்டியமையால் ரூபா 290,507 வித்தியாசம் நிலவியது.

(ஆ) வைப்புப் பேரேட்டின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புகளது மீதி ரூபா 508,977 ஆகும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 783,010 ஆகியமையால் ரூபா 274,033 வித்தியாசம் நிலவியது.

### 1.3.3 தொங்கற் கணக்கு

2011 முதல் இருந்து வரும் தொங்கற் கணக்குச் செலவு மீதியான ரூபா 7,864,759 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி ஐந்தொகையில் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பெற வேண்டிய கணக்குகளான ரூபா 950,536 மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளான ரூபா 214,316 மீதிகளது உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 1646 | பயணம் தொடர்பான மாதாந்தப் பொழிப்பின் மூலப் பிரதியுடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2016 டிசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |

(இ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக் கோவை

| | |
|---|---|
| (i) 143 ஆம் விதி | திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புகள், நிறுத்தி வைத்த பணம், நூலக வைப்புக்கள், ஏனைய வைப்புகள் தொடர்பாக வெவ்வேறு வைப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்படவில்லை. |
| (ii) 217 ஆம் விதி | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,801,448 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 3,612,963 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் சாதகமான ரூபா 8,414,411 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாடகை வருவாய் ரூபா 4,569,142, ஏனைய உதவு தொகை ரூபா 3,556,046 என அதிகரித்தமை நிதிப்பெறுபேற்றில் ரூபா 8,414,411 அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்தன.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 வருவாய் சேகரிப்பிலான செயலாற்றல்

(அ) செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறான வருவாய் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| தீர்வையும் வரியும் | 47 | 53 | - |
| குத்தகை வாடகை | 2,785 | 4,596 | 46 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 303 | 208 | - |
| ஏனைய வருவாய் | 4,605 | 1,882 | 1,217 |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாகப் பெற வேண்டிய தொகையை இணங் காண்பதற்கும் அதனைப் பெறுவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி நிறுவனங்களது பராமரிப்புக் கூறுகளுக்குத் தேவையான மூல இயந்திர சாதனங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு உள்ளூராட்சி அமைச்சால் சபைக்கு வழங்கப்பட்ட 07 வாகனங்களது உரித்தைச் சுவீகரிப்பதற்கு 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதியளவிலும் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமாகவுள்ள பாவனையில் ஈடுபடுத்தக்கூடிய 05 வாகனங்களுக்கும் நடப்பாண்டிற்கான வருவாய் அனுமதிப்பத்திரங்கள் பெறப்படவில்லை.

(இ) சேவையிலிருந்து நீங்கிய 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடனாகிய ரூபா 88,626 தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தினது 4 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.2.1 புரநெகும செயற்திட்டத்தின் கீழ் எத்தாபெந்திவெவ வீதியை நிர்மாணித்தல் - ரூபா 12,946,956

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கைப் பிரகாரம், இவ்வீதியை நிர்மாணிக்கும் வேலை 03 மாதங்களுக்குள் நிறைவேறவேண்டுமாயினும், 09 மாதங்களாகியும் சிறு கற்கைப் பரவுதல் மாத்திரமே நடைபெற்றிருந்தமையால் 2012 நவம்பர் 26 ஆந் திகதி ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 செப்டெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச பொருட் கொள்வனவுக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய மீண்டும் அந்த வேலையை 2013 ஒக்டோபர் 15 ஆந் திகதியளவில் நிறைவேற்றுமாறு ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், 2013 ஒக்டோபர் 15 ஆந் திகதியளவிலும் வேலையை ஆரம்பிக்காமையால் மீண்டும் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது.

(இ) முறையான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படாது இவ்வீதியில் ஆரம்பத்தில் தார் பூசுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் 1 ½ கிலோ மீட்டருக்கு கொங்கிறீட்டிட்டு ½ கிலோ மீட்டருக்கு தார் பூசுவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2014 மார்ச் 13 ஆந் திகதியன்று ரூபா 18,826,970 பெறுமதியான ஒப்பந்தத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதற்கமைய, முதலாவது உடன்படிக்கையை

விட ரூபா 5,880,014 கூடுதலாகச் செலவாகியதுடன், இவ்வேவையை நிறைவேற்றுவதற்கு 02 ஆண்டுகளுக்கும் அதிகமான கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) கூறு விலைக் கோரல் நிதியம் (SBD) 60.1 க்கமைய, முதலாவது ஒப்பந்தகாரரின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் அவ்வொந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக பொறியியலாளர் சான்றுறுதிப்படுத்த வேண்டுமாயினும், அவ்வாறு சான்றுறுதிப்படுத்தப்படவில்லை. உடன்படிக்கை இரத்தாகி 2 ஆண்டுகளுக்குப் பின்னர் கொடுப்பனவிற்கென ரூபா 5,022,259 பெறுமதியான விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ்விலைப்பட்டியல் தொடர்பாக வேலைத்தளத்தில் பரிசீலனைகளை மேற்கொண்டு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு மாகாண செயற்திட்டப் பணிப்பாளர் 2017 மார்ச் 06 ஆந் திகதி குழு ஒன்றை நியமித்திருந்தார். எனினும், இரண்டாவது ஒப்பந்தகாரர் அவ்வீதியில் கொங்கிறீட்டிட்டு 2014 செப்டம்பர் 30 ஆந் திகதி சபையிடம் ஒப்படைத்திருந்தார். இதன் காரணமாக, இந்த அளவைகள் மேற்கொள்ளப்பட்டமை சர்ச்சைக்குரியதானது. எவ்வாறாயினும், செயற்திட்ட பொறியியலாளரால் 2016 சனவரி 21 ஆந் திகதி சான்றுறுதிப்படுத்தப்பட்ட விலைப்பட்டியலின் அடிப்படையில் 2017 யூன் 18 ஆந் திகதி ரூபா 2,048,538 முதலாவது ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) இவ்வொந்தப்பக்காரருக்கு பணம் வழங்குகையில், இரண்டாவது ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்பட்டதாகச் சான்றுறுதிப்படுத்தப்பட்டுக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 589,648 கழித்துக் கொள்ளப்படவில்லை.

(ஊ) ஒப்பந்தத்துக்கான உடன்படிக்கை மீறல் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 07 மில்லியனுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டிருக்கையில், முதலாவது ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்கையில் தாமதக் கட்டணமாக கழித்துக்கொள்ளப்பட்ட ரூபா 1,294,696 ஐ கூறு விலைக் கோரல் நியமம் (SBD) 49.2 க்கமைய ஒப்பந்தகாரருக்கு வழங்குமாறு உதவிச் செயற்திட்டப் பணிப்பாளர் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதி பிரதேச சபைச் செயலாளருக்கு அறிவித்திருந்தார். அதற்கமைய, 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதியன்று பிரதேச சபையால் 1,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கூறு விலைக் கோரல் நியமம் (SBD) 49.2 க்கமைய உடன்படிக்கையை இரத்துச் செய்து ஒப்பந்தகாரரிடம் கழித்துக்கொள்ளப்பட்ட தாமதக் கட்டணத்தை மீண்டும் வழங்கியமைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

(எ) உடன்படிக்கையை மீறிய ஒப்பந்தகாரரது ரூபா 647,347 பெறுமதியான செயலாற்றல் பிணை முறி சபையினால் 2014 சனவரி 30 ஆந் திகதியன்று காசாக்கப்பட்டபோதும், உதவிச் செயற்திட்ட பணிப்பாளர் அத்தொகையை நியமக்கூறு விலைக்கோரல் ஆவணத்தின் (SBD) 60.2 ஆம் பிரகாரம் ஒப்பந்தகாரருக்குக் திருப்பியளிக்குமாறு 2017 ஏப்ரல் 05 ஆந் திகதி செயலாளருக்கு அறிவித்திருந்தார். அதற்கமைய, 2017 மே 08 ஆந் திகதி சபை செயலாற்றல் பிணை முறித் தொகையான ரூபா 647,347 ஐ ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், SBD 60.2 இன் பிரகாரம் முறியை விடுவித்தமை தொடர்பான விடயங்களை அறவித்திருக்கவில்லை.

**3.2.2 புறநெகும செயற்திட்டத்தின் கீழ் பல பணிகளுக்கான கட்டிடத்தை நிர்மாணித்தல் - ரூபா 8,401,836**

---

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இக்கட்டிட வேலை முடிடைந்து 2016 நவம்பர் 30 ஆந் திகதி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், கூரையினது ஒரு பக்கத்தில் ஏறக்குறைய 30

மீட்டருக்கு மழை நீர் வழிந்தோடுவதற்கான தகரம் பொருத்தப்படாததாலும் RAMP தயாரிக்கப்படாததாலும் மழை காலங்களில் நீர் வெளிச் சுவரை நனைத்தவாறு வெளியேறியிருந்தது.

(ஆ) கட்டிடத்தின் வெளிச்சுவரில் ஏறக்குறைய 177 சதுர மீட்டருக்கு மை பூசுவதும் உள்ளே 2 அறைகளின் நிலத்தில் டைல் பதிப்பதும் 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதியளவிலும் நடைபெறாதிருந்தது.

(இ) பொறியில் மதிப்பீட்டின்படி கட்டிடத்தை நிர்மாணிக்கையில் ரூபா 265,148 பெறுமதியான 03 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இக்கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலைக்கு 2016 செப்டம்பர் 12 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும், வேலை நிறைவேறியதற்கான சான்றிதழின் பிரகாரம் வேலை நிறைவேறியது 2016 நவம்பர் 30 ஆந் திகதியே. அதற்கமைய, அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமாகிய ரூபா 327,671 ஐ கழித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2.3 மைலக்குடாக் குளப் பிரதான வீதியில் கொங்கிறீட் இடல்

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் மைலக்குடா பிரதான வீதியில் கொங்கிறீட் இடும் இரண்டாம் கட்ட வேலைக்கு ரூபா 4,000,280 பெறுமதியிலான உடன்படிக்கை 2016 யூலை 08 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டு ஒப்பந்தப் பணிகள் 2016 ஒக்தோபர் 08 ஆந் திகதியளவில் நிறைவேறியிருக்க வேண்டுமாயினும், வேலை முடிந்ததை அறவிக்கும் சான்றிதழின் பிரகாரம், வேலை முடிவடைந்தது 2017 சனவரி 01 ஆந் திகதியே. அதற்கமைய, ஒப்பந்த உடன்படிக்கையின் 6.4 க்கமைய அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 168,012 ஆகும். எவ்வாறாயினும், கழித்துக் கொள்ளப்பட்ட தொகை ரூபா 60,004 ஆகும். அதற்கமைய, ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய எஞ்சிய தொகை ரூபா 108,008 ஆகும். அதனைக் கழித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2.4 புரநெகும செயற்திட்டத்தின் கீழ் மஹதிவுல்வெவ கடைகளை நிர்மாணித்தல் - ரூபா 1,843,000

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இக்கடைகள் 2016 நவம்பர் 08 ஆந் திகதி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும், சுவர்களில் பல வெடிப்புகள் காணப்பட்டன. அதேபோன்று, இரு குளியல் அறைகள் நிர்மாணிக்கப்பட்டபோதும், அவற்றிற்கு Septic Tank நிர்மாணிக்காததால் அவற்றை பயன்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) உடன்படிக்கைப் பிரகாரம், 2016 ஒக்டோபர் 08 ஆந் திகதி வேலை முடிவடைய வேண்டுமாயினும், வேலை முடிவடைந்ததற்கான சான்றிதழின் பிரகாரம் வேலை முடிவடைந்தது 2016 நவம்பர் 08 ஆந் திகதியே. இதன் காரணமாக, அறவிடப்பட வேண்டிய ரூபா 27,645 தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **கவனம் செலுத்த வேண்டிய துறைகள்** |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கணக்கீடு |
| | (ii) துணைப் பேரேடுகளைப் பேணுதல் |
| (ஆ) வருவாய் நிர்வாகம் | (i) வருவாய் நிலுவையை அறவிடுதல் |
| | (ii) நீதிமன்றத் தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணத்தையும் பெறுதல் |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | உடன்படிக்கை காலத்தினுள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |